**செய்தி வெளியீடு எண்: 437** **நாள் : 09.09.2015**

**<u>பத்திரிக்கைச் செய்தி :–</u>**

சென்னை அரசினர் யோகா மற்றும் இயற்கை மருத்துவக் கல்லூரியில் 2015–2016ஆம் கல்வியாண்டிற்கான மூன்றாவது எம்.டி (யோகா மற்றும் இயற்கை மருத்துவம்) பட்ட மேற்படிப்பிற்கான மாணவர் சேர்க்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு இந்திய மருத்துவக் கழகத்தில் யோகா மற்றும் இயற்கை மருத்துவப் பட்டம் / (BNYS) / இயற்கை மருத்துவ பட்டியம் (N.D. OSM) பதிவு செய்திருக்கும் மாணவர்கள், எம்.டி (யோகா மற்றும் இயற்கை மருத்துவம்) பட்ட மேற்படிப்பு விண்ணப்ப படிவம் மற்றும் தகவல் தொகுப்பேட்டினை www.tnhealth.org என்ற சுகாதார துறையில் வலைதள முகவரி மூலமாக 17.08.2015 முதல் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம், பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் ரூ.2000/– (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) மதிப்பு கொண்ட “இயக்குனர் இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி துறை” என்ற பெயரில் குறுக்கு கோடிட்ட, தேசிய மயமாக்கப்பட்ட வங்கி கேட்பு வரைவோலையுடன் 11.09.2015க்குள் “செயலர், தேர்வுக் குழு இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித்துறை, சென்னை–106” என்ற முகவரிக்கு மேற்கண்ட இறுதி நாள் மற்றும் நேரத்திற்குள்ளாக வந்து சேர்ந்திட வேண்டும். தமிழ்நாட்டை சேர்ந்த ஆதிதிராவிடர் / ஆதிதிராவிட (அருந்ததியினர்) பழங்குடியினர் இன விண்ணப்பதாரர்கள் விண்ணப்ப கட்டணமாக ரூ.2000/– செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கப்படுகின்றனர்.

விண்ணப்பங்கள், இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி இயக்குனரகத்திலோ அல்லது தேர்வு குழு அலுவலகத்திள்ளோ வழங்கப்பட மாட்டாது. எம்.டி. (யோகா மற்றும் இயற்கை மருத்துவம்) பட்ட மேற்படிப்பிற்கான நுழைவு தேர்வு (Entrance Examination) அரசு சித்த மருத்துவ கல்லூரி, அறிஞர் அண்ணா அரசு இந்திய மருத்துவமனை வளாகம், அரும்பாக்கம், சென்னை–106ல் 26/09/2015 (சனிக்கிழமை) காலை 9.30க்கு நடைபெறும் என்று தெரிவிக்கப்படுகிறது.

**முதன்மை செயலர் / ஆணையர்**
**இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித்துறை**
**சென்னை–106**

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**